ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வெருவாதாள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வெருவாதாள் ॥

திருவரங்கம் - 2

‡வெருவாதாள் வாய்வெருவி⋆ வேங்கடமே!
வேங்கடமே! என்கின்றாளால்⋆
மருவாளாள் என் குடங்கால்⋆ வாள் நெடுங்கண்
துயில் மறந்தாள்⋆ வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன்⋆
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
எங்ஙனம் நான் சிந்திக்கேனே (1)

கலையாளா அகல் அல்குல்⋆ கனவளையும்
கையாளா என் செய்கேன் நான்⋆
விலையாளா அடியேனை⋆ வேண்டுதியோ
வேண்டாயோ என்னும்⋆ மெய்ய
மலையாளன் வானவர் தம் தலையாளன்⋆
மராமரம் ஏழெய்த வென்றிச்
சிலையாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
எங்ஙனம் நான் சிந்திக்கேனே (2)

மான் ஆய மென் நோக்கி⋆ வாள் நெடுங்கண்
நீர் மல்கும் வளையும் சோரும்⋆
தேன் ஆய நறுந் துழாய் அலங்கலின்
திறம் பேசி⋆ உறங்காள் காண்மின்⋆
கான் ஆயன் கடி மனையில் தயிர் உண்டு
நெய் பருக⋆ நந்தன் பெற்ற
ஆன் ஆயன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
அம்மனைமீர்! அறிகிலேனே (3)

www.prapatti.com

தாய் வாயில் சொற் கேளாள்⋆ தன் ஆயத்-
    தோடணையாள் தட மென் கொங்கையே⋆
ஆரச் சாந்தணியாள்⋆ எம் பெருமான்
    திருவரங்கம் எங்கே என்னும்⋆
பேய்மாய முலையுண்டிவ்வுலகுண்ட⋆
    பெரு வயிற்றன் பேசில் நங்காய்⋆
மா மாயன் என் மகளைச் செய்தனகள்⋆
    மங்கைமீர்! மதிக்கிலேனே (4)

பூண் முலைமேல் சாந்தணியாள்⋆ பொரு கயல் கண்
    மை எழுதாள் பூவை பேணாள்⋆
ஏண் அறியாள் எத்தனையும்⋆ எம் பெருமாந்
    திருவரங்கம் எங்கே என்னும்⋆
நாண்மலராள் நாயகனாய்⋆ நாம் அறிய
    ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி⋆
ஆண்மகனாய் என் மகளைச் செய்தனகள்⋆
    அம்மனைமீர்! அறிகிலேனே (5)

தாதாடு வனமாலை⋆ தாரானோ
    என்றென்றே தளர்ந்தாள் காண்மின்⋆
யாதானும் ஒன்றுரைக்கில்⋆ எம் பெருமான்
    திருவரங்கம் என்னும்⋆ பூமேல்
மாதாளன் குடம் ஆடி மதுசூதன்⋆
    மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன்⋆ என்மகளைச் செய்தனகள்⋆
    எங்ஙனம் நான் சொல்லுகேனே (6)

வார் ஆளும் இளங்கொங்கை⋆ வண்ணம்
    வேறாயினவாறெண்ணாள்⋆ எண்ணில்
பேராளன் பேர் அல்லால் பேசாள்⋆ இப்
    பெண் பெற்றேன் என் செய்கேன் நான்⋆
தாராளன் தண் குடந்தை நகர் ஆளன்⋆
    ஐவர்க்காய் அமரில் உய்த்த

www.prapatti.com

தேர் ஆளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
எங்ஙனம் நான் செப்புகேனே (7)

உறவாதும் இலள் என்றென்று⋆ ஒழியாது
பலர் ஏசும் அலர் ஆயிற்றால்⋆
மறவாதே எப்பொழுதும்⋆ மாயவனே!
மாதவனே! என்கின்றாளால்⋆
பிறவாத பேராளன் பெண் ஆளன்
மண் ஆளன்⋆ விண்ணோர் தங்கள்
அறவாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
அம்மனைமீர்! அறிகிலேனே (8)

பந்தோடு கழல் மருவாள்⋆ பைங்கிளியும்
பால் ஊட்டாள் பாவை பேணாள்⋆
வந்தானோ திருவரங்கன்⋆ வாரானோ
என்றென்றே வளையும் சோரும்⋆
சந்தோகன் பௌழியன்⋆ ஐந் தழல் ஓம்பு
தைத்திரியன் சாமவேதி⋆
அந்தோ! வந்தென் மகளைச் செய்தனகள்⋆
அம்மனைமீர்! அறிகிலேனே (9)

‡சேல் உகளும் வயல் புடை சூழ்⋆ திருவரங்கத்-
தம்மானைச் சிந்தை செய்த⋆
நீல மலர்க் கண் மடவாள் நிறை அழிவைத்⋆
தாய் மொழிந்த அதனை⋆ நேரார்
கால வேல் பரகாலன்⋆ கலிகன்றி
ஒலி மாலை கற்று வல்லார்⋆
மாலை சேர் வெண் குடைக்கீழ் மன்னவராய்ப்⋆
பொன் உலகில் வாழ்வர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com